//தனி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.3227/அ3/2024 நாள். 03.07.2025

---

பொருள் : பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – வேலூர் மாவட்டம், அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2024 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தது – ஆசிரியருடன் உபரி என கண்டறியப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை **பணிநிரவல் மாறுதல் கலந்தாய்வில் கலந்துக் கொள்ள தகவல் தெரிவித்தல்** – தொடர்பாக.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.037584/சி3/இ1/2025 நாள்.26.06.2025.

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2024 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது. பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளின்படி ஆசிரியருடன் கூடிய உபரி பணியிடங்களை கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் மாறுதல் (Deployment Counselling) வாயிலாக கலந்தாய்வு நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஆசிரியருடன் உபரி என கண்டறியப்பட்ட பணியிட விவரங்கள் முன்னுரிமை (Priority) அடிப்படையில் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் இப்பொருளில் தனிக்கவனம் செலுத்தி,

1. தங்கள் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விவரங்களில் திருத்தங்கள் ஏதேனுமிருப்பின் இவ்வலுவலகத்திற்கு 05.07.2025அன்று பிற்பகல் 02.00 மணிக்குள் உரிய சான்றுகளுடன் தகவல் தெரிவித்தல் வேண்டும்.

2. விவரங்கள் சரியாக உள்ளதெனில் படிவத்தின் நகலில் சார்ந்த ஆசிரியர்களிடம் கையொப்பம் பெற்று இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஆசிரியருடன் உபரி என கண்டறியப்பட்ட பாடங்களில் தற்போது காலிப்பணியிடம் ஏற்பட்டிருப்பின், அதன் விவரங்களை சமர்ப்பிக்க சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

4. முன்னுரிமை
   - மனவளர்ச்சி குன்றிய/மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர்
   - சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் / டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள் / இருதய, மூளைகட்டி அறுவைச் சிகிச்சை செய்தவர்கள் / புற்றுநோயாளிகள்
   - இராணுவத்தில் பணிபுரிபவரின் மனைவி
   - விதவைகள் / மனைவியை இழந்தவர்கள், 40 வயதை கடந்த திருமணம் செய்து கொள்ளாத பெண் பணியாளர்கள் / சட்டப்படி விவாகரத்து பெற்ற பெண் ஆசிரியை.

மேற்காணும் முன்னுரிமையில் உள்ள ஆசிரியர்கள் உரிய சான்றுகளை தலைமையாசிரியர் கையொப்பத்துடன் 05.07.2025அன்று பிற்பகல் 02.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் பணிநிரவல் கலந்தாய்வில் **வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில்** நடைபெற உள்ளதால். பணிநிரவல் கலந்தாய்வில் **சார்ந்த ஆசிரியர்களை** கலந்துக்கொள்ள **பணியிலிருந்து விடுவித்து** அனுப்பி வைக்க சார்ந்த அரசு/நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இடம் – மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.**

- **பட்டதாரி ஆசிரியர் பணிநிரவல் கலந்தாய்வு 07.07.2025அன்று காலை 09.30மணிக்கு**

இணைப்பு – உபரி ஆசிரியர்களின்
பெயர்ப்பட்டியல் – பாடவாரியாக

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.